பக்கங்கள்:-26

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 14 | புதன்கிழமை | 26.02.2025 | அதிர்வு 206

## யாழில் மயங்கி வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

மரணச்சடங்குக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

வவுனியா, தோணிக்கல் 07

# வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 109 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றம்

+ செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆதரவு
+ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. எதிர்ப்பு
+ வாக்கெடுப்பில் தமிழரசு எம்.பிக்கள் பங்கேற்கவில்லை



2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 109 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

நேற்று மாலை 6.10 மணிக்கு இடம்பெற்ற இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 155 வாக்குகளும், எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 07

# தீர்வு கிடைக்கும் வரை பட்ஜட்டை எதிர்ப்போம்

## தமிழர் பிரதேசங்களில் ஆக்கிரமிப்புக்கள் இன்னமும் தொடர்கின்றன என்று கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

**"வடக்கு, கிழக்கு மக்கள் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். இருப்பினும் வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கான தீர்வுகள் ஏதும் முன்வைக்கப்படவில்லை. எம் மக்களுக்கு முரண்பாடற்ற தீர்வு கிடைக்கும் வரையில் அரசின் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதை தவிர வேறு எந்தத் தெரிவுகளும் எமக்குக் கிடையாது. போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் தமிழர் பிரதேசங்களில் ஆக்கிரமிப்புக்கள் இன்றும் தொடர்கின்றன."**

**- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.** 06






# நாடு அநுரவோடு! எம் ஊர் எம்மோடு!!

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் சுமந்திரன் கருத்து

(எஸ்.ரகுதீஸ்)

"நாடு அநுரவுடன் இருக்கட்டும், எம் ஊர் எங்களுடன் இருக்கட்டும் என்ற சிந்தனையை நாங்கள் மக்களுக்கு முன்வைக்கின்றோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் 07




தேர்தல் சமயத்தில் எந்த விடயத்தையும் கண்மூடித்தனமாகக் கூறலாம். ஆனால் பிறருக்கு அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் விடயங்களை முன் வைக்கும் போது மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

அதுவும் சமூக ஊடகங்களில் – தெட்டத் தெளிவாகப் பதிவாகும் சமயங்களில் – குற்றச்சாட்டுகளை கண்மூடித்தனமாக, சகட்டுமேனிக்கு அடுக்கக் கூடாது. குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருந்தாலும் கூட, அவற்றை நிரூபிக்கஜ் கூடிய ஆதாரங்கள், சான்றுகள் இல்லாமல் யார் மீதும் வசைமாரி பொழியக் கூடாது.

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் யாழ் மாவட்டத்தில் தமது ரெலோ கட்சியின் சார்பில் போட்டியிட்ட கட்சியின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரனுக்கு எதிராக சரமாரியான குற்றச்சாட்டுகளை ஊடக அமையத்தில் தோன்றி வரிசையாக அடுக்கி இருந்தார் அக்கட்சியை சேர்ந்த விந்தன் கனகரத்தினம்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தமக்கு 06



# புதிய அரசாங்கத் திட்டங்களுக்கு செஞ்சிலுவை சங்கம் ஒத்துழைப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் (ICRC) பிரதிநிதிகள் குழுவின் புதிய பிரதானி செவரின் சபாஸ்'க்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் புதிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் ஆதரவை வழங்குவது குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

அதன்படி, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை வலுப்படுத்தத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் திறன் மேம்பாட்டிற்காகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உடன்பாடு தெரிவித்தது.

காணாமல் போனவர்களைத் தேடுவதற்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு இந்த ஆண்டு பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாசாநாயக்க இதன்போது தெரிவித்தார்.

இன மத பேதமின்றி, ஒரே இலங்கை தேசமாக ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்லும் பயணத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக 'Sri Lankan Day" கொண்டாட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

1989 ஆம் ஆண்டு முதல் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினால் இலங்கையில் மேற்கொண்டு வரும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்த ஜனாதிபதி அதற்குத் தனது நன்றியைத் தெரிவித்தார்.









# நிதியை வினைத்திறனுடன் பயன்படுத்துமாறு அமைச்சுகளின் செயலாளர்களுக்கு பணிப்புரை



அமைச்சுகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை வரையறுக்கப்பட்ட நிதிக் கட்டமைப்பிற்குள் வினைத்திறனுடன் பயன்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அமைச்சுகளின் செயலாளர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதில் ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் அமைச்சுகளின் செயலாளர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.











# கறுவா ஏற்றுமதி சந்தையை விரிவுபடுத்தத் தீர்மானம்



கறுவா ஏற்றுமதி சந்தையை விரிவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, கறுவா ஏற்றுமதியிலிருந்து கிடைக்கும் வருவாயை விரிவுபடுத்துவது இந்த ஆண்டு முன்னுரிமை அளிக்கப்படும் என அந்த அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கை கறுவாவுக்கான முக்கிய சந்தையாகப் பாரம்பரியமாகத் தென் அமெரிக்கா இருந்து வந்துள்ளது.

எனவே, இம்முறை ஏற்றுமதி வருவாயில் அதிகரிப்பை அடைய, அமைச்சு புதிய பாரம்பரியமற்ற சந்தைகள் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு பாரம்பரிய சந்தைகளுக்கு அப்பால் சென்று சீனா மற்றும் ஐரோப்பா போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளில் கவனம் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

# கிளீன் ஸ்ரீலங்காவுக்கு இந்தோனேசியா உதவி







ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் குஸ்டினா டொபின்ங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

புதிய அரசாங்கத்துக்கு வாழ்த்து தெரிவித்த இந்தோனேசியத் தூதுவர் குஸ்டினா டொபின்ங் இரு நாடுகளுக்கும் இடையிலான 70 வருட நட்புறவைப் பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் இந்தோனேசியாவில் புதிய அரசாங்கங்கள் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளதாகவும், இலங்கையின் தற்போதைய அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு அவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை இந்தோனேசியாவிலும் செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

இந்தோனேசியா மற்றும் இலங்கைக்கு இடையில் நீண்டகால மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பிலும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தோனேசியா மற்றும் இலங்கைக்கு இடையில் காணப்படும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார தொடர்புகளைப் பலப்படுத்திக்கொண்டு இருநாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் சந்தைகளை விரிவுபடுத்திக்கொள்வது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

# அநுரகுமார திஸாநாயக்கவினுடையது என்று எந்த கொள்கையும் இல்லை: பிமல் ரத்னாயக்க

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினுடையது என்று எந்த கொள்கையும் இல்லை எனவும் தேசிய மக்கள் சக்தி என்ற கொள்கையே காணப்படுவதாகவும் நாடாளுமன்ற சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவு செலவு திட்டத்தை முன்வைத்த ஜனாதிபதி என்னுடையது என எங்கும் குறிப்பிடவில்லை, மாறாக எமது என்றே ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். நாம் ஒரு அணி அநுரவின் சிந்தனைகள் என்று எதுவும் இல்லை. இங்கே அனைத்தும் நாம் என்றே உள்ளது.

எமது அரசாங்கத்தில் உள்ள அனைவரும் ஒரே வழியில் பயணிக்கின்றோம். எம்மிடம் அவரது சிந்தனைகள் இவரது சிந்தனைகள் என்று எதுவும் இல்லை.

அதே போன்று அரசியல் லஞ்சம் வழங்கிச் செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று எந்த கொள்கை ரீதியான முடிவுகளை நாம் மேற்கொள்ளவில்லை.

தம்புத்தேகம தொடருந்து நிலையத்துக்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை ஜனாதிபதிக்கே தெரியாமல் இடம்பெற்றது.



வரவு செலவு திட்டத்தை அவர் அதனை முன்வைத்தாலும் அதற்கான யோசனை எங்கிருந்து கிடைக்கப்பெற்றது என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

தம்புத்தேகம ரயில் நிலையத்தினூடாக மரக்கறி பரிமாற்றத்தை மேற்கொள்ள முடியும் என ரயில்வே திணைக்களத்தின் அதிகாரிகளே முன்வைத்திருந்தனர். எனவே எம்முள் வேறுபாடுகள் இல்லை."" என்றார்.

# நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தை தொடர்ந்தும் பயன்படுத்த வேண்டிய நிலை

## அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு




புதிய சட்டமொன்று நிறைவேற்றப்படும் வரையில் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுமென ஆட்சியமைப்பதற்கு முன்னர் தற்போதைய அரசாங்கம் கூறியிருந்த போதிலும், தற்போதும் அந்த சட்டம் பயன்படுத்தப்படுவதாக ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்புக்குப் பாதிப்பு இல்லை என கூறுகின்ற அரசாங்கம், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கணேமுல்ல சஞ்சீவவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாகவும் குறித்த ஊடகவியலாளர் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, விருப்பமிருந்தாலும், இல்லாவிட்டாலும் தற்போதுள்ள சட்டத்தின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பில் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, புதிய சட்டமூலமொன்றை முன்வைத்து அதனை நிறைவேற்றியதன் பின்னர் இவ்வாறான விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குள் மேலும் பல உயிரிழப்புகள் ஏற்படக்கூடும்.

எனவே, தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் விரைவில் தேசிய பாதுகாப்புக்கான சட்டமொன்றை உருவாக்குவதற்கான, ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பரிந்துரைகளை முன்வைக்குமாறு விடயத்துடன் தொடர்புடைய தரப்பினருக்கு ஏலவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுமக்களின் பாதுகாப்புக்கு பாதிப்பில்லை: அருண ஜயசேகர




பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவிக்கின்றார்.

பதிவாகும் சம்பவங்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அபகீர்த்தியையும் அவதூறையும் ஏற்படுத்தி இருக்கின்றன எனத் தெரிவித்து 5 கோடி ரூபா மான நஷ்டம் கோரி சுரேந்திரன் குருசாமி யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்.

அந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கின் எதிராளியான விந்தன் கனகரத்தினம் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

வழக்கின் அழைப்பாணை அவருக்கு முறையாக விநியோகிக்கப்பட முடியவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. நீதிமன்றம் ஊடாக அதனை விநியோகிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

வழக்கு இப்போது தள்ளி போடப்பட்டிருக்கின்றது.

மேற்படி அவதூறு ஏற்படுத்தியவை எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளைத் தேர்தலுக்கு முன்னர் விந்தன் கனகரத்தினம் சரமாரியாக அடுக்கிய போது அது தொடர்பில் நீதிமன்றில் வழக்குகளை எதிர்கொள்ளவும் தாம் தயார் என்ற சாரப்பட அவர் அப்போது கூறி இருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது

அது உண்மையானால் இந்த வழக்கை அவர் பின்னடிப்பின்றி எதிர்கொள்வாரென எதிர்பார்க்கலாம்.

\+ \+ \+

வரவு – செலவுத் திட்டத்தை ஒட்டி எதிர்க்கட்சிகள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு பற்றி ஆராய்வதற்காக திங்கள் மாலை நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் மற்றும் சிறிநேசன் ஆகியோருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் வேறு இரண்டொரு தலைவர்களும் கடுமையாக முரண்பட்டனர் என்று ஒரு தகவல் கிடைத்தது என நேற்றுத் தெரிவித்திருந்தேன் அல்லவா?

நேற்று இடம்பெற்ற வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்புத் தொடர்பில் தீர்மானிப்பதற்காகவே நேற்று முன்தினம் அக்கூட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூட்டியிருந்தார்.

அங்கு தமிழரசுக் கட்சி சார்பில் அதன் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் தமக்கு உதவியாளராக சிறிநேசன் எம்.பியையும் அழைத்துக் கொண்டு சென்றிருந்தார்.

கூட்ட ஆரம்பத்திலேயே சிறிதரன் எதிர்க்கட்சித் தலைவர் மீது சீற்றத்துடன் பாய்ந்து இருக்கிறார்.

அரசமைப்பு விவகாரங்களுக்கான உபகுழுவுக்கு தமக்குத் தெரியாமல் தமது கட்சியைச் சேர்ந்த சத்தியலிங்கத்தை நியமித்தமை குறித்து சிறிதரன் ஆரம்பத்தில் குறை கூறினார் எனத் தெரிகின்றது.

அதற்குப் பதிலளித்த சஜித் பிரேமதஸ, அது சபாநாயகர் வழங்கிய நியமனம், அதற்கும் எதிர்க்கட்சித் தரப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, உங்கள் கட்சிக்குள் இருக்கும் பிரச்சினையை இங்கு எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் எழுப்பி, தேவையற்ற குழப்பம் செய்ய வேண்டாம் என்று சஜித் பிரேமதாஸ சிறிதரனைக் கடிந்து கொண்டார் எனக் கூறப்படுகின்றது.

வரவு – செலவுத் திட்டம் தொடர்பாக கட்சியின் நிலைப்பாடு யாது எனக் கேட்ட போது, சிறிதரன் தமது கட்சி கடந்த காலங்களில் எடுத்த பல்வேறு நிலைப்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்க முற்பட்டிருக்கின்றார்.

அப்போது குறிப்பிட்ட சஜித் பிரேமதாஸ, மனோ கணேசன் போன்றவர்கள் "இவையெல்லாம் உங்கள் கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் நீங்கள் பேச வேண்டியவை. முடிவாக உங்கள் கட்சியின் நிலைப்பாடு யாது என்பதை மட்டும் இங்கு கூறினால் போதும்" – என்று சிறிதரனை விசனிக்கும் வகையில் கருத்து கூறினார்கள் எனத் தெரிய வருகின்றது.

ரவி கருணாநாக்கா எம்.பி. போன்ற, பலர் உட்கட்சி பிரச்சினையை எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் கொண்டு வந்து கிளப்ப வேண்டாம் என்ற சாரப்பட சிறிதரனைப் பார்த்துக் கருத்துக் கூறினர் எனவும் தெரிகிறது.

ஆக ஜீவன் தொண்டமான் மாத்திரமே சிறிதரனைக் காபந்து பண்ணும் விதத்தில் சில சமாளிப்பு உரைகளை கூறி நிலைமையை சுமுகமாக்கி விட்டார் என்றும் தெரிகின்றது.

எனினும் நேற்று வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழு கூடாமல், கொரடாவின் தனிப்பட்ட உரையாடல் மூலம் தீர்மானம் எடுத்து, வாக்களிப்பு சமயம் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகாமல் இருந்து, நடுநிலைமை வகித்தது தமிழரசு கட்சி.

ஆக, தமிழர் தரப்பில் செல்வம் அடைக்கலநாதன் மாத்திரம் வரவு – செலவு திட்டத்தை ஆதரித்து வாக்களித்தார் எனத் தெரிய வந்தது.

---

## தீர்வு கிடைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில்நேற்றுசெவ்வாய்க் கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் 7 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "சுதந்திரத்தின் பின்னரான 76 வருடங்களாக இந்த நாட்டை இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் மாத்திரமே ஆட்சி செய்தன. பெயர்கள் மாறுபட்டாலும் அந்த இரண்டு கட்சிகளே ஆட்சி செய்து வந்துள்ளன. இந்நிலையில் தற்போதைய அரசு பதவியேற்ற பின்னர் கடந்த 76 வருடங்களை காட்டிலும் மாறுபட்ட காலகட்டமாக தற்போதைய நிலை இருக்கின்றது.

இனப்பிரச்சினைகள் மற்றும் தமிழ்த் தேசிய வாதம் தொடர்பில் அவர்களின் கருத்துக்களை கேட்காவிட்டாலும் அவர்களின் கொள்கையை முன்னெடுப்பவர்களாக இருக்கின்றனர். ஆனால், தாம் ஆட்சிக்கு வந்தால் இனவாதத்தை முற்றாக இல்லாமல் செய்வதாகக் கூறினர். இனப்பிரச்சினைக்கான அடிப்படை காரணம் இனவாதமாகும். இதனை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

காலம்காலமாக இனவாதத்தால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், இந்த வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் சிறந்த ஆரம்பத்தை அரசு முன்வைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வாக ஏதும் குறிப்பிடப்படவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டவாறு வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றே நாங்கள் எதிர்பார்த்தோம். இந்த மாகாணங்களுக்காக விசேடமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வடக்கில் வீதி அபிவிருத்திருக்காக 5000 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதாகக் கூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்கள் உள்ளன. அதன்படி ஒரு மாவட்டத்திற்கு ஆயிரம் மில்லியன் ரூபாவே கிடைக்கும். அடிப்படை உட்கட்டமைப்புக்கு குறைந்தப் பட்சம் 1300 மில்லியன் ரூபாவாவது தேவையாகும். அதேபோன்று யாழ். நூலக அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது போதுமானதல்ல. அத்துடன் கச்சேரிக்கான மூலதனச் செலவை எடுத்துக் கொண்டால் யாழ்ப்பாணத்துக்கு 187 மில்லியன் ரூபாவும், மன்னாருக்கு 189 மில்லியன் ரூபாவும், வவுனியாவுக்கு 100 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவுக்கு 126 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சிக்கு 179 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படுகின்றது.

எனினும், அம்பாந்தோட்டைக்கு 500 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாகவும், மாத்தறைக்கு 400 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாகவும், கம்பஹாவுக்கு 500 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. கேகாலை, இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் அவ்வாறே அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால், எமது மாவட்டங்களுக்கு 200 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

போரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் இவை. இங்கே என்ன செய்தியைக் கூற விரும்புகின்றீர்கள். இந்த மாவட்டங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி கூறினாலும் அதற்கு மாற்றமான வகையிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வரவு – செலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் கீழுள்ள கல்வி அமைச்சின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 6000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவுக்கு மேல் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

ஏன் இவ்வாறு வேறுபட்ட வகையில் கொடுப்பனவு.இதுகல்வியைஇராணுவமயமாக்கும் விடயம்தானே. கடந்த அரசின் இந்தக் கொள்கையை நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். போர் முடிவடைந்து 15 வருடங்கள் நிறைவடைந்தும் தற்போதும் அடக்குமுறையான செயற்பாடுகளே இருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் நிதி கேந்திரமாக மாற்றப்படும் என்று கூறப்பட்டு, அந்தப் பொறுப்பை இந்தியா ஏற்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் சர்வதேச ரீதியில் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தியா இதை ஏற்றுக்கொள்ளுமா? இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா அவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றது.

ஆனால், நீங்கள் வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்க முயற்சிக்கின்றீர்கள். இந்நிலையில் இந்தியா கிழக்கில் அபிவிருத்திகளைச் செய்யுமா? நீங்கள் இதில் பல சந்தேகங்கள் எழுகின்றன.

விவசாயத்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு துறைகளை எடுத்துக்கொண்டால் வடக்கு மற்றும் கிழக்கில் வனப் பாதுகாப்பு திணைக்களம், உயர் பாதுகாப்பு வலயங்களாக பெரும்பாலான காணிகளைக் கைப்பற்றியுள்ளன. பொதுமக்கள் தமது விவசாய நிலங்களுக்குச் செல்வதற்காக நீதிமன்றத்தை நாட வேண்டியுள்ளது.

அந்த மக்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் மயிலத்தமடு போன்ற இடங்களில் தமிழர்களின் பால் பண்ணை தொழிலுக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. மயிலத்தமடு

07



# மாலைதீவு - இலங்கை கூட்டுச் சுற்றுலா திட்டத்தைச் செயல்படுத்துவதில் கவனம்

மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையில் கூட்டுச் சுற்றுலா திட்டம் செயல்படுத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் மாலைதீவு குடியரசின் உயர்ஸ்தானிகர் மசூத் இமாட் இடையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

கடந்த தேர்தல்களில் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம் அடைந்த வெற்றிகளுக்கு மாலைதீவு குடியரசின் வாழ்த்துகளைத் தெரிவித்த உயர்ஸ்தானிகர், தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் குறித்து மகிழ்ச்சியையும் தெரிவித்தார்.

மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையேயான 60 ஆண்டு கால நட்பை வலுப்படுத்தி, தொடர்ந்து பேணுவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் மாலைதீவு ஆற்றும் சிறப்பான பங்களிப்பிற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

## தீர்வு கிடைக்கும்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

மேய்ச்சல் தரை பகுதிக்காக மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி அரசு தெளிவான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால் முன்னைய அரசுகளின் வரவு - செலவுத் திட்டத்தை போன்றதாகிவிடும். இந்த அரசின் கொள்கை முன்னைய அரசுகளின் கொள்கை மற்றும் செயற்பாடுகளில் இருந்து மாறுபடாது. நாங்கள் கடந்த அரசுகளின் வரவு - செலவுத் திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தோம்.

இவ்வாறான அடிப்படைப் பிரச்சினைகள் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் முகம் கொடுக்கின்றனர். இந்த அரசின் ஊடாக பாரிய மாற்றம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எம் மக்கள் மத்தியில் இருந்தது. ஆனால், இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்குக்குத் தீர்வுகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

அரசானது எங்களுக்கு குழப்பமில்லாத தீர்வை வழங்கும் வரையில் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதைத் தவிர எங்களுக்கு வேறு தெரிவுகள் கிடையாது." - என்றார்.

## யாழில் மயங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வடிவேலு சற்குணராசா (வயது 61) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தில் உள்ள உறவினரின் மரணச்சடங்குக்கு அவரும் மனைவியும் வந்திருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மரணச் சடங்கு நிறைவடைந்ததைத் தொடர்ந்து பிற்பகல் 1:30 மணியளவில் அருகில் உள்ள உறவினர் வீட்டில் குளித்துக் கொண்டிருந்தபோது அவர் மயங்கி வீழ்ந்துள்ளார்.

அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாணம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## நாடு அநுரவோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கட்சின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நாங்கள் மக்களுக்கு ஊர் சிந்தனையை முன்வைக்கின்றோம்.

அது என்னவென்றால், இப்பொது மத்திய அரசு தேசிய மக்கள் சக்தியின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, தோழர் அநுரவின் கைகளில் நாடு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களும் தங்களுடைய தேர்தல் சுலோகமாக "அநுரவோடு நாடு" என்று அறிவித்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும்கூட அநுரவுக்காகவே மக்கள், தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். அந்தத் தேர்தல்கள் முடிவடைந்து விட்டன.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மத்தியில் ஆட்சியில் இருக்கின்றது. அவர்கள் மத்தியில் ஆட்சியில் இருக்கின்றார்கள் என்பதற்காக, எமது ஊர் சம்பந்தப்பட்ட விடயங்களை அவர்களிடம் கொடுக்க முடியாது. அது எங்களுடைய கையில் இருக்க வேண்டும்.

நாங்கள் ஒருபோதும் நாட்டின் ஆட்சியைப் பிடிக்கவோ அல்லது ஜனாதிபதி யாவதற்கோ முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால், எங்களுடைய ஊரில் இருக்கும் அதிகாரங்களை நாங்கள் மற்றவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கக்கூடாது.

ஆகவே, நாடு அநுரவுடன் இருக்கட்டும், எம் ஊர் எங்களுடன் இருக்கட்டும் என்ற சிந்தனையை நாங்கள் மக்களுக்கு முன்வைக்கின்றோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் ஏற்கனவே எடுத்துக்கொண்ட தீர்மானத்துக்கு அமைவாக தனித்துப் போட்டியிட்டு, பின்னர் கூட்டாக ஆட்சியமைக்க முடியும்.

பங்காளிக் கட்சிகளுடன் எமது கட்சியின் தலைவர் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார்." - என்றார்.

## வரவு - செலவுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

ஆளும் கட்சியைச் சேர்ந்த 159 பேரில் நேற்று சபை அமர்வில் கலந்துகொண்ட 154 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் ஆதரவாக வாக்களித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. அத்துடன் சுயேச்சைக் குழுவின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஐக்கியமக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், தயாசிறி ஜயசேகர ஆகியோரும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

2025 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு அல்லது 'வரவு செலவுத் திட்ட உரை' நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் கடந்த 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பெப்ரவரி 18ஆம் திகதி முதல் நேற்று (25) வரை, 7 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவு - செலவுத் திட்டம்) மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றது.

குழு நிலை விவாதம் பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 19 நாட்கள் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய 2025 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜெனிவாப் புளுகுரை

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய 58 ஆவது அமர்வில் உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தலைமையின் கீழ் மனித உரிமைகளை நிலை நிறுத்துதல், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதல் மற்றும் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குதல் ஆகிய விடயங்களில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை கோடிகட்டி வலியுறுத்தி இருக்கின்றார்.

ஊழலை எதிர்த்து, நீதி நெறிமுறையான நிர்வாகத்தை முன்னெடுப்பதற்காக 'கிளீன் ஸ்ரீலங்கா' (தூய்மையான இலங்கை) திட்டத்தை தமது அரசு நடைமுறைப்படுத்தி இருப்பதற்காக்ச் அவர் தமது அரசை மெச்சிக் கொண்டார்.

நல்லிணக்க முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக 'இலங்கை தினத்தை' முன்மொழிந்து, தேசிய ஒற்றுமைக்கான அர்ப்பணிப்பை அரசு வெளிக்காட்ட முன்வந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு பற்றிய கலந்துரையாடல்கள் தொடரும் அதேவேளை, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் போன்ற நிறுவனங்கள் பலப்படுத்தப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

அவர் கூறுகின்ற எல்லாம் சரி. ஆனால் நல்லிணக்கம் என்பது - புரிந்துணர்வு என்பது - மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் வேலை அல்ல. அது, மதங்கள், இனங்கள், மொழிகள் தாண்டி மக்களுக்கிடையே இசைவாக உருவாக்கப்பட வேண்டியது. சிறுபான்மையினரின் மனங்களையும் அடக்குமுறை தாண்டி, அரவணைப்பால் வென்று ஈட்டப்பட வேண்டியது.

அதனைப் பெரும் இழப்பீடுகள் வழங்குவதன் மூலமோ, உண்மைகளை மறைத்துத் தந்திரங்கள் செய்வதன் மூலமோ அடைந்து விட முடியாது என்பதை இலங்கை வெளி விவகார அமைச்சரும் அவரது அரசும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எழுபத்தியைந்து ஆண்டுகளுக்கு மேல் புரையோடிப் போய் கிடக்கும் தேசிய இன பிரச்சினை இந்த நாட்டில் சுமார் முப்பது ஆண்டு காலம் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடும் யுத்தத்தை ஏற்படுத்தியிருந்தது.

அரசாங்கம் தனது ஆயுத பலம் மூலமும், அரச பயங்கரவாதம் மூலமும், யுத்தத்தை வெற்றி கொண்டிருந்தாலும், கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேல் இந்த மண்ணில் அடக்கி, ஒடுக்கி, சின்னா பின்னப்படுத்தப்பட்டு வரும் சிறுபான்மையினரான தமிழ்ப் பேசும் மக்களின் மனதை வெல்லவில்லை என்பதுதான் உண்மை. வெல்லவில்லை என்பது மாத்திரமல்ல, அதையும் தாண்டி அந்த மக்களை இன்னமும் அடக்குமுறை நெருக்குவாரத்துக்குள்தான் அரசு தொடர்ந்தும் வைத்திருக்கின்றது என்பதுதான் நிஜம்.

யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மைகளை மூடி மறைத்து, குற்றம் இழைத்தவர்களைப் பாதுகாத்து, பொறுப்புக் கூறலை உதாசீனம் செய்து, நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி விடலாம் என்று கனவு கண்டால் அந்தப் போக்கு வெறும் அபத்தமாகும்.

குற்றங்கள் இழைத்தவர்களை அம்பலப்படுத்தி, உண்மைகளை வெளிக்கொணர்ந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தினால்தான் அர்த்தமுள்ள நல்லிணக்கமும், நியாயமான புரிந்துணர்வும், நின்று, நிலைத்து, நீடிக்கும் தீர்வும் நாட்டுக்குக் கிடைக்கும் என்பதை ஜெனிவாவுக்குப் போய் புளுகுரைக்கும் இலங்கை அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையைப் பூசி மெழுகி மூடி விட்டு, பொய்மையின் மீது கட்டப்படும் எந்தப் புரிந்துணர்வு - எந்த நல்லிணக்கமும் - எந்தத் தீர்வும் - நின்று, நிலைத்து, நீடிக்காது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.



# கொல்கத்தாவிலிருந்து 340 கிலோமீற்றர் தொலைவில் வங்கக்கடலில் நிலநடுக்கம்


வங்கக்கடலில் நேற்று 5.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று காலை 6.10 அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக இந்தியாவின் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்காள தலைநகர் கொல்கத்தாவிலிருந்து 340 கிலோமீற்றர் தொலைவில் வங்கக்கடலில் 91 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஜனவரி 7ஆம் திகதி நேபாளம் மற்றும் இந்தியாவின் சில பகுதிகளில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 90 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.






# இலங்கையிலுள்ள மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் உண்ணாவிரத போராட்டம்

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் மீன்பிடி துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்கச் சென்று எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறை தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் கடந்த இரண்டு நாள்களுக்கு முன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ள 32 மீனவர்களை படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர்கள் வரும் வெள்ளிக்கிழமை முதல் தங்கச்சிமடத்தில் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட போவதாக அறிவித்துள்ளன.

நேற்று நடந்த மீனவர்கள் ஆலோசனை கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக கடற்படையின் தொடர் கைது நடவடிக்கையை கண்டித்து காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் அறிவித்து நேற்று இரண்டாவது நாளாக ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 32 மீனவர்கள்,03 அவர்களின் அதி நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் 5 படகுடன் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடற்படையினரால் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலை மன்னார் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 32 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை (07-03-2025) விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையிலே, மீனவர்களை விடுதலை செய்யக் கோரி காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் அறிவித்து நேற்று இரண்டாவது நாளாக ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

# தி.மு.கவின் போலி நாடகங்களை மக்கள் நம்பப்போவதில்லை

## அண்ணாமலை தெரிவிப்பு



தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மும்மொழி கற்கும் வாய்ப்பு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மறுக்கப்படுவது ஏன் என்ற கேள்விக்கு, இதுவரை பதில் அளிக்க மறுத்து வருகிறார் முதல்வர் ஸ்டாலின். உங்கள் போலி நாடகங்களை தமிழக மக்கள் இனியும் நம்பப்போவதில்லை." என அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் கருப்பு பெயிண்ட் டப்பாவுடன் சுற்றி வரும் தொண்டர்களுக்கு கடிதம் ஒன்று எழுதியிருப்பதாக அறிந்தேன்.

அதில் அவர், நாம் எந்த மொழிக்கும் எதிரியில்லை. யார் எந்த மொழியைக் கற்பதற்கும் தடையாக நிற்பதில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

சி.பி.எஸ். மற்றும் மெட்ரிகுலேஷன் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மும்மொழி கற்கும் வாய்ப்பு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மறுக்கப்படுவது ஏன் என்ற கேள்விக்கு, இதுவரை பதில் அளிக்க மறுத்து வருகிறார் முதல்வர் ஸ்டாலின்.

மும்மொழி கற்கத் தடை இல்லை, ஆனால் நீங்கள் கற்கவேண்டும் என்றால் தி.மு.கவினர் நடத்தும் சி.பி.எஸ். அல்லது மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் உங்கள் குழந்தைகளைச் சேர்த்துவிடுங்கள் என்கிறாரா ஸ்டாலின்?

உங்கள் போலி நாடகங்களை தமிழக மக்கள் இனியும் நம்பப்போவதில்லை. பணம் படைத்தவர்களுக்கு ஒரு நீதி, ஏழை எளியவர்களுக்கு ஒரு நீதி என்ற திமுகவின் சாயம் வெளுக்கத் தொடங்கிவிட்டது.

மேலும், பெயிண்ட் டப்பாவுடன் சுற்றி வரும் உங்கள் கட்சியினருக்கு, இந்தி எது ஆங்கிலம் எது என்பதை, உங்கள் அறிக்கை விளக்க மறந்து போனது உள்ளபடி வருத்தமே." எனத் தெரிவித்துள்ளார்.



# சிரியாவின் பெரும்பகுதியை முழுமையாக இராணுவ மயமாக்க இஸ்ரேல் கோரிக்கை



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெற்கு சிரியாவின் பெரும்பகுதியை முழுமையாக இராணுவ மயமாக்க கோரியுள்ளார்.

ஜனாதிபதி பஷர் அல்-அசாத் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர், இஸ்ரேலுக்கும் சிரியாவின் புதிய தலைமைத்துவத்திற்கும் இடையில் மோதலை ஏற்படுத்தக்கூடிய ஒரு அறிவிப்பு இதுவாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் மத்தியில் நெதன்யாகு உரையாற்றுகையில்,

"அசாத்தை தூக்கியெறிந்த இஸ்லாமியக் குழுவான ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாமின் (HTS) படைகளையோ அல்லது டமாஸ்கஸின் தெற்கே உள்ள பகுதிக்குள் நுழைவதற்கு புதிய சிரிய இராணுவத்தையோ இஸ்ரேல் அனுமதிக்காது.

புதிய ஆட்சியின் படைகளிடமிருந்து குனிட்ரா, டெரா மற்றும் சுவைடா மாகாணங்களில் தெற்கு சிரியாவை முழுமையாக இராணுவமயமாக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்.

அதேபோல், தெற்கு சிரியாவில் உள்ள ட்ரூஸ் சமூகத்திற்கு எதிரான எந்த அச்சுறுத்தலையும் நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்" என்று கூறினார்.

கடந்த டிசம்பரில் அசாத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் இஸ்ரேலியப் படைகள் தாங்கள் கைப்பற்றிய சிரியப் பகுதிக்குள் காலவரையின்றி இருக்கும் என்றும் அவர் கூறினார்.


இது இஸ்ரேலிய மூலோபாயத்தில் ஒரு மாற்றமாக இருக்கும்.

1967 மத்திய கிழக்குப் போரின் போது கோலானின் பெரும்பகுதியை சிரியாவிடமிருந்து இஸ்ரேல் கைப்பற்றி பின்னர் இணைத்தது.

இந்த நடவடிக்கை சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் படவில்லை.

இதனிடையே, சிரியாவின் புதிய இடைக்கால ஜனாதிபதி, HTS தலைவரான அஹ்மத் அல்-ஷாரா, இஸ்ரேலுக்கு மோதலை விரும்பவில்லை என்றும் 1973 இல் மற்றொரு போருக்குப் பிறகு முடிவுக்கு வந்த இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒப்பந்தத்தை நிலைநிறுத்தத் தயாராக இருப்பதாகவும் இஸ்ரேலுக்கு உறுதியளிக்க முயன்றார்.

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களுக்கு சிரியாவை தளமாக பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# உக்ரைன் - ரஷ்யா போர் விரைவில் முடிவடையும்

## பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவிப்பு

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போர் நிறுத்தம் எதிர்வரும் வாரங்களில் ஒப்புக் கொள்ளப்படலாம் என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் போர் நடவடிக்கையின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் நடந்த பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, போர் அடுத்த சில வாரங்களுக்குள் முடிவடையும் என அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டதாகத் தெரிவித்த இம்மானுவேல் மெக்ரோன் உக்ரைனுக்கான எந்தவொரு அமைதி காக்கும் ஒப்பந்தத்தின் செலவு மற்றும் சுமையை ஐரோப்பா ஏற்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உக்ரைனில் எந்தவொரு சமாதான ஒப்பந்தமும் உக்ரைன் சரணடைவதாக இருக்கக்கூடாது எனவும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் வலியுறுத்தியுள்ளார்.









# இராணுவ உயர் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அநுரகுமார சந்திப்பு

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்த கலந்துரையாடலொன்று ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இராணுவ உயர் அதிகாரிகளுடனான இந்த கலந்துரையாடலின் போது, இலங்கையின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு நிலை எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர்.











# சைவர்களால் போற்றப்படும் மகாசிவராத்திரி விரதம்...!

மகா சிவராத்திரி விரதம் சைவ மக்களால் கொண்டாடப்படும் சிவனுக்கு உரிய சிறப்பு வாய்ந்த விரதமாகும். இவ்விரதம் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் இரவில் கொண்டாடப்படும். இதன் நோன்பு முறைகளைக் கூறும் நூல் மகா சிவராத்திரி கற்பம் என்னும் சிறிய நூல் ஆகும். இவ் விரதத்தின் மூலம் சிவலோகத்தையும் சிவ சாயுட்சியத்தையும் அடைவார்கள். சிவராத்திரி காலத்தில் சிவபூஜை செய்பவர்களுக்குச் சுகவாழ்வும் பரத்தில் கைவல்யமும் கிட்டும் எனச் சொல்லப்படுகின்றது.

சிவராத்திரி விரதம் கடைப்பிடிப்போர் (விரதம் பிடிப்போர்) முதல் ஒருநாள் ஒரு பொழுது உணவருந்தி சிவராத்திரியன்று உபவாசமாய் சிவ சிந்தனையுடன் கண் விழித்திருந்து நான்கு யாம வழிபாடு செய்யவேண்டும். அடுத்தநாள் காலையில் தீர்த்த மாடி சுவாமி தரிசனம் செய்து அடியார்களுடன் உணவருந்தி (பாரணை செய்து) விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

சிவராத்திரி புண்ணிய தினத்தில் சிவாலயங்களில் நடைபெறும் நான்கு யாம அபிசேக ஆராதனைகளுக்கு அவரவர் வசதிக்கு ஏற்ப பொருள்களைக் கொடுத்து உதவலாம். மகா சிவராத்திரி மாசி மாதம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியன்று வருவது மஹா சிவராத்திரி மற்ற எல்லா சிவராத்திரிகளை விடவும் இதுவே சிறப்புடையது. பல்வேறு வகையான பெரிய நலன்களை இது வழங்குவது. மற்ற சிவராத்திரிகளில் பெறும் எல்லா பேற்றையும் இது ஒரு சேர வழங்குவதால் இது மஹாசிவராத்திரி என்று போற்றப்படுகிறது. மஹா சிவராத்திரியில் நான்கு காலங்களிலும் இரவில் பூஜை செய்ய வேண்டும். சிவபஞ்சாயதனம் கைக்கொண்டவர்கள் இரவில் பூஜையைத் தரித்து நற்பலன் பெற வேண்டும்.

சிவராத்திரி என்ற சொல்லே மோக்ஷம் தருவது என பொருள் பெறும். சிவ வசீகரண மந்திரத்தை ருத்திர பூமியில் இந்தப் புண்ணிய நாளில் ஜெபம் செய்து தேவதா வஸ்யம் முதல் பல லாபங்களை அடையலாம். குருவான சிவ பெருமான் இதற்கு அருளுவார். ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு திதி உண்டு. ஈஸ்வரனுக்கு உரிய திதி இறுதி திதியான சதுர்த்தசி திதி ஆகும். எல்லா உயிர்களும் தங்கள் வாழ்வின் இறுதியில் அவரையே அடைகின்றன என்பதால் இந்த இறுதித் திதியை அவருக்கு ஒதுக்கினார்கள். அதில் மாசி மாதம் தேய்பிறையில் வரும் சதுர்த்தசி இரவே மகிமை மிக்க மகா சிவ ராத்திரி ஆகும்.

## இந்த விரத்தைப் பற்றிய ஐதீகங்கள் பல உள்ளன

ஒரு காலத்தில் உலகப் பிரளயத்தின் போது உயிர்கள் எல்லாம் சிவனிடத்தே ஒடுங்கின. உலகங்களே தோன்றவில்லை. இந்த நிலையில் எல்லையில்லாக் கருணையுடைய அம்பிகை அண்டங்கள் தோன்றி இயங்கும் பொருட்டு இறைவனை இடைவிடாது தியானம் செய்தாள். அப்போது இறைவன் தன்னுள் ஒடுங்கி இருந்த உலகங்களை மீண்டும் உண்டாகச் செய்து உயிர்களையும் படைத்தருளினார். அப்பொழுது உமையவள் சுவாமி நான் தங்கள் மனதில் தியானித்துப் போற்றிய காலம் ‘சிவராத்திரி’ என்று பெயர் பெறவேண்டும் என்றும் அதனைச் சிவராத்திரி விரதம் என்று யாவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதை கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முக்தியடைய வேண்டும் என்றும் பிராத்தித்தார். இறைவனும் அவ்வாறே என்று அருள் புரிந்தார். அம்பிகையைத் தொடர்ந்து நந்தியம் பெருமான் சனகாதி முனிவர் சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து தங்கள் விருப்பம் நிறைவேறப் பெற்றார்.

மகாபிரளயத்தின் பின்னர் எம்பெருமான் சிவபெருமான் தனியாக இருந்து ஆழ்ந்த தவத்தில் மூழ்கியிருந்தார். எப்போதும் உடனாய சிவகாமியம்மை மீண்டும் அண்டசராசரங்களையும் படைக்க வேண்டி எம்பெருமானை நோக்கித் தவமிருந்தார். அன்னையின் தவத்தின் பலனாக ஐயன் திருவருட்சம்மதம் அருளினார். அன்னையின் தவத்தில் மகிழ்ந்த எம்பெருமான் அன்னையின் திருவுள்ள விருப்பத்திற்கு அமைய இந்நாளாகிய சிவராத்திரிச் சாம பொழுதில் கண்விழித்து விரதமிருப்பவர்களுக்கு உரிய பலனைத் தந்தருளினார்.

அம்பிகைக்கு சிவன் அருவுருவில் (உத்பவம்) உபதேசம் செய்த ஆகம உபதேச புண்ணிய காலமான மகா சிவராத்திரி விரதம் கடைப் பிடிக்கும் போது புத்தி சாலிக் குழந்தைகள் அமைவர். குபேரனிடம் இருப்பது போல் வற்றாத செல்வம் கிடைத்து நிலைக்கும். ஒரு வருடம் முழுவதும் ஐந்து பிரிவாகச் சிவராத்திரி விரதம் கடைபிடித்தால் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

## சிவராத்திரி விரத முறையில் கண் விழிப்பது ஏன்?

சிவராத்திரி அன்று கண்

தொடர்ச்சி ▼

# சைவர்களால் போற்றப்படும் மகாசிவராத்திரி விரதம்...!

தொடர்ச்சி ▲

விழித்திருந்து விரதமிருந்து இறைவனை வணங்கும்போது முழுமையான இறைவன் அருள் கிடைக்கும். தியானம் நிலைக்கும். நினைத்த காரியம் நடக்கும். சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ பகல் பொழுதைக் கழிக்க வேண்டும். உபதேசம் தந்த குருவைப் பூஜை செய்து விட்டு உடைகள் மற்றும் உணவை அந்தணருக்குத் தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யும் விதமாக உணவு உண்ண வேண்டும்.

சிவராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன் தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கிப் போகும். இவர்தான் சிவராத்திரி விரதம் இருக்கலாம். இவர் இருக்கக் கூடாது என்ற விதியெல்லாம் கிடையாது. யார் வேண்டுமானாலும் சிவராத்திரி விரதத்தை மேற்கொள்ளலாம். சிவராத்திரியன்று அதிகாலை எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்து சிறப்பாக, வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவதும், நாவினுக்கருங்கலம், ஆனதும் பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்றறுப் பதுமான... இறைவனின் பஞ்சாட்சர மந்திரத்தை கூறி பூஜை செய்ய வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது. ஆலயம் சென்று லிங்க மூர்த்தியையும் அம்பாளையும் தரிசித்து வரலாம். நாள் முழுவதும் இறைவனின் நாமத்தை ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும்.

### நான்கு ஜாம வழிபாட்டுக்கு உரிய திரவியங்கள்

முதல் ஜாமம் வழிபட வேண்டிய மூர்த்தம் – சோமாஸ்கந்தர், அஷேகம் – பஞ்சகவ்யம், அலங்காரம் – வில்வம், அர்ச்சனை – தாமரை அலரி, நிவேதனம் – பால் அன்னம், சக்கரைபொங்கல், பழம் – வில்வம், பட்டு – செம்பட்டு, தோத்திரம் – இருக்கு வேதம் சிவபுராணம், மணம் – பச்சைக் கற்பூரம், தேர்ந்த சந்தணம், புகை – சாம்பிராணி, சந்தணக்கட்டை, ஒளி- புட்பதீபம்.

இரண்டாம் ஜாமம் வழிபட வேண்டிய மூர்த்தம் – தென்முகக் கடவுள், அபிஷேகம் – பஞ்சாமிர்தம், அலங்காரம் – குருந்தை, அர்ச்சனை – துளசி, நிவேதனம் – பாயசம் சர்க்கரைப் பொங்கல், பழம் – பலா, பட்டு – மஞ்சள் பட்டு, தோத்திரம் – யசுர் வேதம் கீர்த்தித் திருவகவல், மணம் – அகில் சந்தனம், புகை – சாம்பிராணி குங்குமம், ஒளி- நட்சத்திரதீபம்.

மூன்றாம் யாமம் வழிபட வேண்டிய மூர்த்தம் – இலிங்கோற்பவர், அபிஷேகம் – தேன், அலங்காரம் – கிளுவை, விளா, அர்ச்சனை – மூன்று இதழ் வில்வம், சாதி மலர், நிவேதனம் – எள் அன்னம், பழம் – மாதுளை, பட்டு



– வெண் பட்டு, தோத்திரம் – சாம வேதம் திருவண்டப்பகுதி, மணம் – கஸ்தூரி சேர்ந்த சந்தணம், புகை – மேகம் கருங்குங்கிலியம், ஒளி– ஐந்துமுக தீபம்.


நான்காம் யாமம் வழிபட வேண்டிய மூர்த்தம் – சந்திர சேகரர் (இடபரூபர்), அபிஷேகம் – கருப்பஞ்சாறு வாசனை நீர், அலங்காரம் – கரு நொச்சி, அர்ச்சனை – நந்தியாவட்டை, நிவேதனம் – வெண்சாதம், பழம் – நானாவித பழங்கள், பட்டு – நீலப் பட்டு, தோத்திரம் – அதர்வண வேதம், போற்றித்திருவகவல், மணம் – புணுகு சேர்ந்த சந்தணம், புகை – கர்ப்பூரம் இலவங்கம், ஒளி– மூன்று முக தீபம்.

மகாசிவராத்திரி புண்ணிய தினம் சிவபெருமானை வழிபட்டால் கவலைகள் அனைத்தும் நீங்கும். காரிய வெற்றியும் ஏற்படும்.'சிவாய நம' என்று சிந்தித்திருந்தால்'அபாயம்'நமக்கு ஏற்படாது 'உபாயம்' நமக்கு ஏற்படும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

இந்தப் புனிதமான நாளில் விரதம் இருந்தால் புண்ணியமும் கூடும். பொருளாதார நிலையும் உயரும்.

இதனால்தான் 'சிவராத்திரி' விரதம் சிறந்த பலனைக் கொடுக்கிறது.சைவ அன்பர்களாகிய நாம் சிவராத்திரி விரதத்தை அனுட்டித்து இன்மை மறுமைப் பயன்களைப் பெற்று உய்வோமாக.

**சைவப்புலவர்**
**எஸ்.ரி.குமரன்,**
**(செயலாளர்,**
**அகில இலங்கை**
**சைவப்புலவர் சங்கம்.)**



# மஹா சிவராத்திரி விரதத்தை எவ்வாறு கடைப்பிடித்தால் பலன் கிடைக்கும்?

இன்று (26) புதன்கிழமை இந்துக்கள் சிவனை நினைந்து வழிபடும் மகா சிவராத்திரி தினமாகும்.

இந்து மதம் என்பது மதம் இல்லை, அது வாழ்வியல் நெறி முறை, எப்படி ஒரு மனிதன் வாழவேண்டும் என்று சொல்லும் நெறிமுறை.

அதேபோல் சிவராத்திரி என்பது விழா அல்ல! அது, மனதைக் கட்டுப்படுத்தும் மகாவிரதம். அதனால், இதைக் கொண்டாடு கிறோம் என்று சொல்வதை விட, அனுஷ்டிக்கிறோம் என்று சொல்வதே சரி.

சிவராத்திரி என்றால் பட்டினி கிடப்பது, கண்விழிப்பது, கோவி லுக்குப் போவதுடன் நின்று விடா மல், இதன் தத்துவம் உணர்ந்து இவ்விரதத்தை அனுஷ்டித்தால், வாழ்க்கை என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ளலாம்.



வித்தகர் விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா.

நம் மனம் சந்திரனின் இயக்கத்தை பொறுத்து செயல் படுகிறது. சந்திரன் வளரும் நாள்கள் 15. தேயும் நாள்கள் 15. இதில் தேய்பிறையின், 14 ஆவது நாள், அதாவது, அமாவா சைக்கு முந்தைய நாள், சந்திரன் ஏறத்தாழ மறைந்துவிடும். நம் மனமும் இப்படித்தான். ஒருநாள், ஒன்றை அடைந்தே தீர வேண்டும் என்ற ஆசை பொங்கும். அடுத்த நாளே, 'அது எதற்கு, அதனால் என்ன பயன்' என எண்ணி, அந்த எண்ணம் தேய்ந்து போகும். மறுநாளே, 'விட்டேனா பார்' என்று, அதே ஆசையின் மீது லயிக்க ஆரம்பித்து விடும் இப்படி நிலையில்லாமல் இருப்பது மனம்.

### தேய்பிறை 14ஆம் நாள் அனுஷ்ப்பது ஏன்?

மனித மனம், ஒரு நிலைப் பட தியானம் அவசியம். அலை பாயும் மனதை, சிவத்தின் மீது வைத்து, எங்கும் போகாமல் கட்டிப் போட வேண்டும். அப்படிக் கட்டிப் போட்டாலும், அமாவா சைக்கு முந்தைய நாள், சந்திர னின் சிறு கீற்றுப் போல, மன தின் ஏதோ ஒரு மூலையில் முந் தைய ஆசை எண்ணங்களின் சிறு வடிவம் புதைந்து தான் இருக்கும். அதையும் ஒழித்தால் தான், நாம் பிறவியில் இருந்து விடுபட்டு சிவனை அடையமுடியும். அதற்

தொடர்ச்சி ▼

# மஹா சிவராத்திரி விரதத்தை எவ்வாறு கடைப்பிடித்தால் பலன் கிடைக்கும்?

தொடர்ச்சி ▲

காக சிவனை வழிபடும் நாளே சிவராத்திரி. இந்தத் தத்துவத்தை உணர்த்தத்தான், சிவனை லிங்க வடிவில் படைத்தனர் நம் முன்னோர். லிங்கத்தின் பாணம் ஏறத்தாழ முட்டையின் வடிவில் இருக்கும். ஒரு முட்டை படம் வரையுங்கள். அதற்கு முதலும் இல்லை, முடிவும் இல்லை. சுற்றிச் சுற்றிப் போய்க் கொண்டே இருக்கும். அதே போன்றுதான் சிவனும், முதலும், முடிவும் இல்லாதவர்.

மனிதர்களுக்கு அப்படி இல்லை. நமக்கு பிறப்பு என்னும் முதலும், மரணம் என்னும் முடிவும் இருக்கிறது. இது, நாம் செய்யும் பாவ, புண்ணியத்துக்கு ஏற்ப பல பிறவிகளைத் தருகின்றன. சிலர் ஏழு பிறவி என்று மனிதர்களுக்கு கணக்குச் சொல்வர். 'எழுபிறவி' என்பதே சரி! நம் பாவக் கணக்கு கரையும்வரை, மீண்டும் மீண்டும் பூமியில் எழுந்து கொண்டே இருப்போம். பிறவிச் சூழலில் இருந்து விடுபட ஏதாவது வழியிருக்கிறதா என்றால், இருக்கிறது. அதற்கு ஒரு மந்திர வார்த்தையைச் சொல்லியிருக்கின்றனர் முன்னோர். அதுதான், 'அன்பே சிவம்!' பிற உயிர்களையும் தம்மை போல கருதி அன்பு செலுத்த வேண்டும்.

## சிவ இராத்திரி எவ்வாறு உருவானது?

ஒரு வேடன் புலிக்கு பயந்து மரத்துக்கு மேலே ஏறி அமர்ந்திருந்தான். அது வில்வ மரம். வேடன் தூக்கம் வராமல் இருக்க ஒவ்வொரு இலையாகப் பறித்து கீழே போட்டுக் கொண்டிருக்க, அது கீழே இருக்கும் சிவலிங்கத்தின் மேல் விழுந்தது. இதனால் அவனுக்கு சிவ தரிசனம் கிடைத்தது. அதுவே சிவராத்திரி எனக் கொண்டாடப்படுகிறது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இப்படி அடிமுடி தேடிய படலமும் உண்டு.

சிவராத்திரி என்பது அம்பாளின் வேண்டுதலின் படி கொண்டாடப்படுவதால் அது சிவனுக்கு உரிய தாயிற்று.

சிவராத்திரி நாளில் பகல், இரவு முழுவதும் உணவு எதுவும் உண்ணாமல், உறங்காமல் கண் விழித்து, சிவராத்திரி இரவு முழுவதும் சிவாலயம் அல்லது குல தெய்வம் கோவிலில் பூஜையில் கலந்து கொண்டு, சிவராத்திரிக்கு மறுநாள் பகல் முழுவதும் விழித்திருக்க வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே சிவராத்திரி விரதம் இருந்த பலன் முழுமையாகக் கிட்டும்.

சிவாலயங்களில் சிவராத்திரி அன்று நான்கு ஜாமப் பூஜைகள் நடைபெறும். ஒரு ஜாமம் என்பது 3 மணி நேரம் ஆகும்.

முதல் ஜாமப்பூஜை என்ற முதல் கால பூஜை சிவராத்திரி அன்று மாலை 6 மணி முதல் 9 மணி வரை இடம்பெறும்.

முதல் ஜாமப் பூஜைக்கு சிவலிங்கத்துக்குப் பசும்பால், தேன், பசுநெய், பசும் சாணம், கோசலம் (பசுவின் சிறுநீர்) இவைகள் ஐந்தும் கலந்த பஞ்சகவ்யம் அபிசேகம் செய்து, சந்தனப்பூச்சு செய்து வில்வத்தால் அர்ச்சனை செய்து, பச்சைப்பயிறு நைவேத்தியமாக வைக்க வேண்டும். முதல் ஜாமம் முழுவதும் "ஓம் நமசிவாய" என்ற ஸ்தூல பஞ்சாட்சரத்தை ஜபிக்க வேண்டும்.

## முதல் ஜாமப்பூஜை பலன்கள்

சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்ய பஞ்ச கவ்யம் அளித்தவர்கள் யாரும் பஞ்சத்தால் வாடமாட்டார்கள். பெரும் புண்ணியம் கிட்டும். அவர்களுடைய பிள்ளைகள் நன்றாக வாழ்வார்கள் எதிர்காலத்தில் தங்கள் பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாகச் செய்வார்கள்.

இரண்டாம் ஜாமப்பூஜை என்ற இரண்டாம் கால பூஜையை இரவு 9.01 முதல் நள்ளிரவு 12 மணி வரை செய்வர்கள்.

சிவலிங்கத்துக்குப் பால் (காரம்பசுவின் பால் எனில் மிகவும் சிறப்பு), தேன், சர்க்கரை, நெய், தயிர் கலந்த பஞ்சாமிர்த அபிஷேகம் செய்து, அகில் குழம்பு பூசி தாமரைப் பூக்களால் அர்ச்சனை செய்து நைவேத்தியமாகப் பாயாசம் வைக்க வேண்டும். நைவேத்தியத்தை அனைவருக்கும் பகிர்ந்து தரவேண்டும். இரண்டாம் ஜாமம் முழுவதும் "சிவாய நம" என்ற சூக்சும பஞ்சாட்சரத்தை ஜபிக்க வேண்டும்.

## இரண்டாம் ஜாமப்பூஜை பலன்கள்

பால் கொடுத்தால் தாய்ப்பால் இல்லாதவள், தாய்ப்பால் பெறுவாள். சர்க்கரை கொடுத்தவருக்கு சர்க்கரை நோய் வராது. தயிர் கொடுத்தவருக்கு தயிர் திரண்டு உருவாவது போல, செல்வம் பெருகும். லட்சுமி தேவி நம்மைவிட்டு விலகாமல் இருப்பாள். நம்முடைய குழந்தைகள் நற்குணத்துடன் தானாய் வளரும். நாடு சுபிட்சமடையும், நாமும் நன்றாக இருப்போம்.

மூன்றாம் ஜாமப்பூஜை என்ற மூன்றாம் கால பூஜை நள்ளிரவு மணி 12.01 முதல் பின்னிரவு 3 மணி வரை செய்வர்கள்.

சிவலிங்கத்திற்கு கொம்புத் தேனால் அபிஷேகம் செய்து, அரைத்த பச்சைக் கற்பூரம் பூசி, வில்வத்தால் அர்ச்சனை செய்து, நைவேத்தியமாக எள் சாதம் படையல் இடவேண்டும். மூன்றாம் ஜாமம் முழுவதும் சாம வேதம் பாராயணம் அல்லது சிவயசிவ காரண பஞ்சாட்சரத்தை ஜபிக்க வேண்டும்.

## மூன்றாம் ஜாமப்பூஜை பலன்கள்

போகின்ற உயிரை நிறுத்தவும், விரும்பிய துவாரத்தின் வழியாக உயிரைச் செலுத்தவும் வல்லது இந்த சிவயசிவ என்ற மந்திரமாகும். இதில் இரவு 10.54 முதல் நள்ளிரவு 12.24 மணி வரையிலான நேரத்துக்கு லிங்கோத்பவ நேரம் என்று பெயர். இந்த நேரத்தில் யார் "சிவயசிவ, சிவயசிவ" என்று ஓதுகிறார்களோ, அவர்களுடைய ஆவி பிரிகின்ற போது அளவற்ற சிவகடாட்சம் உண்டாகும்.

நான்காம் ஜாமப்பூஜை என்ற நான்காம் கால பூஜை பின்னிரவு மணி 3.01 முதல் மறுநாள் காலை 6 மணிவரை செய்வர்கள்.

சிவலிங்கத்துக்குச் கரும்புச் சாறு கலந்த அபிஷேகம் செய்து அரைத்த குங்குமப்பூ பூசி வில்வத்தாலும், நீலோற்பவ மலர்களாலும் அர்ச்சனை செய்து, நைவேத்தியமாக சுத்தமான அன்னம் படையல் இடவேண்டும்.

சிவனுக்கு உரிய இந்த பெரு இராத்திரியை சிவ சிந்தனையுடன் மேற்கொள்வோமாக!

# சிவனருளைப் பெற சிவராத்திரி விரதம்!





நடராஜன்
மிருணாளினி

இன்று மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முந்தின நாள் சிவராத்திரி என சிவன் கோயில்களில் சிறப்பு ஆராதனை நடைபெறும்.

மாசி மாதம் அமாவாசைக்கு முதல் நாள் மகா சிவராத்திரி என வருடம் தோறும் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பாவம் செய்யாத மனிதர் என்று உலகில் யாரும் இல்லை. அறிந்தோ, அறியாமலோ அனுதினமும் பாவக்கணக்குகளை ஏற்றிக் கொண்டே போகிறோம். எறும்பு, ஈ, கொசு, தூசு, துரும்பு என எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் இறைவன்.

அவற்றுக்கு நாம் அறியாமலேயே துன்பம் கொடுக்கும் போது, நம் பாவக்கணக்கும் சேர்ந்து விடுகிறது. அவற்றைக் களைய இறைவன் நமக்கு பல வாய்ப்புகளையும் அளித்திருக்கிறார்.

புண்ணிய ஸ்தலங்களுக்கு புனித யாத்திரை, புனித நீராடல், மகாமகம் நீராடல், கங்கோத்திரி, யமுனோத்ரி போன்ற தீர்த்த யாத்திரைகள் எல்லாம் பாவம் தீர்க்கவே. அதற்காக உயிரினங்களை துன்புறுத்திவிட்டு புனித நீராடலில் ஈடுபட்டால் பாவம் கழிந்துவிடும் என்று அர்த்தம் இல்லை. இவ்வுலகில் அனைத்து உயிர்களுக்கும் உயிர்வாழ உரிமை உண்டு என்ற புரிதலே அவசியம்.

இனியாவது பாவங்கள் செய்யக்கூடாது என்று சங்கல்பம் எடுப்பதும் முக்கியம். அப்படி, பாவக்கணக்குகளை எல்லாம் மூட்டை கட்டிவிட்டு, புண்ணியங்களைச் சேர்த்துக் கொள்ளும் அற்புதமான நாள்தான் சிவராத்திரி.

### சிவராத்திரியின் சிறப்புகள்

சிவராத்திரிக்கும் மற்ற விழாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டு. இறைவனின் அவதாரங்களை மையப்படுத்தி கிருஷ்ண ஜெயந்தி, ராமநவமி, அனுமன் ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி, சங்கரர் ஜெயந்தி என விழாக்கள் உள்ளன. ஆனால், சிவபெருமான் பிறப்புக்கும், இறப்புக்கும் அப்பாற் பட்டவர் என்பதால், அவருக்கு ஜெயந்தி என்பது கிடையாது. மாசி மாதம், தேய்பிறை சதுர்த்தசிதான் (24 ஆம் நாள்) சிவராத்திரி. அனைத்துக்கும் ஆதாரமான சிவன், உயிர்களைப் படைத்ததும், ஒடுக்கியதும் (தனக்குள் ஐக்கியப் படுத்தியது) இந்த நாளில்தான். 'லயக்ரம ஸ்ருஷ்டி தினம்' என்கின்றன. சாஸ்திரங்கள். 'லயம்' என்றால் 'ஒடுக்குதல்', 'ஸ்ருஷ்டி' என்றால் 'படைத்தல்'. அதாவது, படைத்தலுக்கும், அழித்தலுக்கும் ஆதாரமான இறைவனுக்கான விழா இது.

எந்த ஓர் உயிருக்கும் ஆணவ குணம் சிறிதேனும் இருக்கும். அதற்கு தேவாதி தேவர்களும் விலக்கல்ல. தங்களின் ஆணவ குணம் அடக்கப்பட, அவர்கள் சிவ பெருமானை வணங்கும் நாள் சிவராத்திரிதான். அந்த நாளின், மூன்றாம் காலத்தில் சிவனாரை வழிபட்டால் எப்பேர்பட்ட பாவங்கள் செய்திருந்தாலும் விட்டு விலகிப் போகும். அதாவது, தன்னால் ஒதுக்கப்பட்ட, தான் ஏற்றுக் கொள்ளாத விஷயங்களைக் கூட சிவபெருமானார் அந்த நேரத்தில் ஏற்றுக்கொண்டு, மன்னித்துஅருள்புரிவாராம்.அந்தஅளவுக்கு மகத்துவம் மிக்க நேரம் அது. 'அல்லல் என்செயும் அருவினை என்செயும் தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என் செயும் தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு எல்லை யில்லதோர் அடிமை பூண் டேனுக்கே' – அப்பர் சுவாமிகள் பஞ்சமா பாவங்கள் எனச் சொல்லப்படும் ஐந்து விதமான பாவங்கள் கூட அச்சமயத்தில் மன்னிக்கப்படுமாம்.

அதாவது கொலை, கொள்ளை, பலாத்காரம், பொய் பேசுதல், ஏமாற்றுதல் ஆகிய பாவங்கள் மன்னிக்கப்படுமாம். எனவேதான், அந்நாளில் சிவாலயங்களுக்குச் சென்று இறைவனைத் தொழ நம் முன்னோர்கள் அறிவுறுத்தினர். அது, நிறைந்த புண்ணியத்தையும் நமக்குத் தரும்.

தொடர்ச்சி ▼

# சிவனருளைப் பெற சிவராத்திரி விரதம்!

தொடர்ச்சி ▲

மூன்றாம் காலம் (நள்ளிரவு) என்பது தீட்டுக்களைக் கூட விலக்கி வைக்கும் நேரம். எனவேதான், சிவபூஜையில் பயன்படுத்தாத 'தாழம்பூ' அந்த ஒரு தருணத்தில் மட்டும் பூஜைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பூலோக உயிர்கள் மட்டுமின்றி தேவர்கள், கிங்கரர்கள், பூதகணங்கள் சுவாமியை ஆராதிக்கும் தினமும் அதுதான் என்பது ஐதீகம். மேலும் இந்த தினம் குற்றங்களைப் போக்கும் தினம் என்பதால், சிவனைச் சரணடைந்து, அடுத்த பிறப்பு என ஒன்று வேண்டாம். இந்தப் பிறப்போடு மோட்சகதி பெற வேண்டும் என்கிற வேண்டுதலை முன் வைத்து வணங்க வேண்டும்.

### சிவராத்திரியின் வரலாறு

சிவராத்திரி கொண்டாட்டத்தின் பின்னணியில் பல கதைகள் சொல்லப்படுகின்றன. வில்வ மரத்தின் மேல் இருந்த குரங்கு ஒன்று, ஒரு சந்தர்ப்பத்தில் மரத்தில் இருந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்து கீழே வீசியது. ஓர் இரவு முழுதும் அது அவ்வாறு செய்தது. அந்த மரத்தினடியில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. யதார்த்தமாக ஒரு வில்வ இலை கீழேயிருந்த சிவன் மீது விழ, அதுவே அவருக்கு அர்ச்சனையானது. அதனால், அகமகிழ்ந்த சிவனார், அந்தக் குரங்கை அடுத்த பிறப்பில் சக்கரவர்த்தியாக அவதரிக்கச் செய்தார். அவரே, முசுகுந்தச் சக்கரவர்த்தி. மன்னரான பின்னும், சிவ பக்தனாக இருந்து, இந்திரன் பூஜித்த விடங்க லிங்கத்தைப் பெற்று சிவனின் அருள் பெற்றார். குரங்கு வடிவில் இருந்த மன்னன் வரலாறு, கயிலாயத்தில் நடந்ததாகவும், காட்டில் வேடன் ஒருவனிடமிருந்து தப்பி காட்டில் இருந்தபோது இவ்வாறு செய்ததாகவும் இரு வேறு புராணங்களில் சொல்லப்படுகின்றன.

திருவண்ணாமலையின் தல வரலாறு நூலில் அடிமுடி காண முடியாதபடி உயர்ந்த சிவன், 'லிங்கோத்பவர்' வடிவம் எடுத்து பக்தர்களை உணர வைத்த நாள் சிவராத்திரி என காணப்படுகிறது. சிவராத்திரியை 'லிங்கோத்பவ காலம்' என்றும் சொல்வர். 'மகாநிசி காலம்' நள்ளிரவுக்கு முன்னும், பின்னுமான ஐந்து நிமிடங்கள். அதாவது, நள்ளிரவு 11.55 - 12.05 வரை என்று சாஸ்திரங்கள் சொல்லும் நள்ளிரவு நேரத்தில், சிவனை வழிபடுவது பல நன்மைகளைத் தரும்.

சிவராத்திரி, நான்கு காலங்களிலும் நான்கு விதமான அபிஷேகங்கள் சிவனாருக்குச் செய்யப்படும். முதல் கால பூஜையில் பஞ்ச கவ்வியம், இரண்டாம் காலத்தில் பால், பஞ்சாமிர்தம், மூன்றாம் காலத்தில் பழச்சாறுகள், நான்காம் காலத்தில் சந்தன அபிஷேகம் செய்வது விசேஷம். சிவராத்திரி அன்று எல்லா சிவாலயங்களிலும் உள்ள சிவபெருமானை வழிபடுவது புண்ணியத்தைத் தரும். ஆனாலும், சிவராத்திரியின் மகிமையால் உண்டான சப்தவிடங்கத் தலங்கள், பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்கள், பஞ்ச சபைகள், பஞ்சபூத தலங்கள், பஞ்ச ஆரண்ய தலங்களுக்குச் சென்று வழிபடுவது விசேஷம்.

### சிவராத்திரி விரத முறை

சிவராத்திரி அன்று கண் விழித்திருந்து விரதமிருந்து இறைவனை வணங்கும்போது முழுமையான இறைவன் அருள் கிடைக்கும். தியானம் நிலைக்கும். நினைத்த காரியம் நடக்கும்.

விரதம் கடைப்பிடிப்போர் முதல் நாள் ஒரு பொழுது உண வருந்தி சிவராத்திரியன்று உபவாசமாய் காலையில் குளித்து சிவ சிந்தனையுடன் கண்விழித்திருந்து நான்கு ஜாம வழிபாடு செய்யவேண்டும். அடுத்தநாள் காலையில் தீர்த்தமாடி, சுவாமி தரிசனம் செய்து அடியார்களுடன் உணவருந்தி (பாரணை செய்து) விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும். சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ, பகல் பொழுதைக் கழிக்க வேண்டும்.

அதன் பின் உபதேசம் தந்த குருவைப் பூஜை செய்து விட்டு, உடைகள் மற்றும் உணவை அந்தணர்க்குத் தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யும் விதமாக உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி நாளில் முழுவதும் உபவாசம் இருக்க முடியாதோர், ஒவ்வொரு ஜாமப் பூஜை முடித்த பிறகும் தண்ணீர், பால், பழங்களை உண்ணலாம்.

சிவ ராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கிப் போகும்.

இவர்தான் சிவராத்திரி விரதம் இருக்கலாம். இவர் இருக்கக் கூடாது என்ற விதியெல்லாம் கிடையாது. யார் வேண்டுமானாலும் சிவராத்திரி விரதத்தை மேற்கொள்ளலாம்.

சிவராத்திரியன்று அதிகாலை எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்து சிறப்பாக வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவதும், நாவினுக்கருங்கலம் ஆனதும், பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்றருப்பதுமான இறைவனின் பஞ்சாட்சர மந்திரத்தை கூறி பூஜை செய்ய வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது. ஆலயம் சென்று லிங்க மூர்த்தியையும் அம்பாளையும் தரிசித்து வரலாம். நாள் முழுவதும் இறைவனின் நாமத்தை ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும்.

முடிந்தவரையில் வில்வ இலைகளால் சிவனாரை அர்ச்சனை செய்ய வேண்டும். வில்வ அர்ச்சனை அவருக்கு உகந்தது என்பதால், அதனையே பிரசாதமாகப் பெற்றுச் சென்று வீட்டில் வைத்தால் 'சுபிட்சம்' உண்டாகும். அந்நாளில் முழு இரவும் கண் விழித்திருந்து, சிவனாரை மனதில் தியானிக்க வேண்டும்.

தேவாரம், திருவாசகப் பதிகங்களை பாராயணம் செய்து அவரை வழிபட வேண்டும். மறுநாள் காலையிலும் கண் விழித்திருந்து, மாலை ஏழு மணிக்கு மேல் உறங்கச் செல்லலாம். முடியாதவர்கள், மதிய உணவுக்குப் பிறகு உறங்கிக் கொள்ள சாஸ்திரம் அனுமதிக்கிறது. சிவனருளைப் பெற ஆண்டுக்கு ஒரு முறை வரும் மகா சிவராத்திரியன்று சிவபெருமானை மனதில் நினைத்துத் தொழுவோம். தீராத பாவங்களும் பிணிகளும் தீர்ந்து, அவரின் பரிபூரண அருள் பெற்று வாழ்வில் உய்வோம்.

# கிளிவெட்டி குமாரபுரம் கிராம மக்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்

## கண்டிக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, கிளிவெட்டி – குமாரபுரம் கிராம மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிப்பதோடு தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள்மீது பாராபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்துள்ளார்.

கிளிவெட்டி குமாரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கள் காலை இடம்பெற்ற வீதி விபத்தின் காரணமாக பூமரத்தடிச்சேனை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரும், குமாரபுரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் காயமடைந்திருந்தார்கள்.

இதன் பின்னர் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதால் அருகில் உள்ள கிராமத்தில் இருந்து ஆயுதங்களுடன்



வருகை தந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கும்பல் ஒன்று குமாரபுரம் கிராமத்தினுள் உள்நுழைந்து அங்கிருந்த அப்பாவி மக்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இச் சம்பவமானது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். இது இன வன்முறைக்கு வித்திடுவதாக அமையும் எனவே இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிடுத்து பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள்மீது நடவடிக்கை எடுத்து அவர்களை தொடர்ந்தும் பாதிப்புக்கு உள்ளாக்கக்க வேண்டாம் என குகதாசன் கோரியுள்ளார்.

குமாரபுரம் கிராம மக்கள் கடந்த காலத்திலும் பல கசப்பான சம்பவங்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள். எனவே இந்த மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும். திங்கள் சம்பவத்தின் பின்னர் அக்கிராம மக்கள் மிகுந்த அச்சத்துடன் காணப்படுகின்றார்கள். எனவே எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாத வகையில் அரசு நடவடிக்கை எடுப்பதோடு இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீட்டையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# பொன் அணிகளின் போர் நாளை ஆரம்பம்

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான பொன் அணிகளின் போர் என்று அழைக்கப்படும் 108ஆவது கிரிக்கெட்போட்டிநாளை (27) ஆரம்பிக்கவுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் முதலாம் திகதி வரை மூன்று நாட்கள் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி 175ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வாண்டு பொன் அணிகளின் போரின் வரலாற்றில் முதன் முறையாக மூன்று நாட்கள் போட்டியாக நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் தொடர்ச்சியாக 32ஆவது ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி வரும் எட்டாம் திகதி காலை ஒன்பது மணிக்கும், அருட் திரு G.A. பிரான்சிஸ் யோசப் வெற்றிக் கிண்ணத்துக்கான 5ஆவது இருபது -20 (T-20) கிரிக்கெட் போட்டி வரும் 12ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் நடைபெற்ற போட்டிகளில் இரு நாள்கள் போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 35 தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி 16 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 31 போட்டிகள் வெற்றி – தோல்வியின்றி முடிவடைந்தன. ஒரு போட்டி கைவிடப்பட்டது.

ஒரு நாள் போட்டியில் (மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள்) 23 தடவைகள் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் 7 தடவைகள் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டி இடைநிறுத்தப்பட்டது.

இருபது-20 கிரிக்கெட் போட்டித் தொடரில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மூன்று தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு தடவையும் வெற்றி பெற்றுள்ளன.

இவ்வருடம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு பற்குணம் மதுஷனும் யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு சிதம்பரலிங்கம் மதுஷனும் தலைமை தாங்கவுள்ளனர்.






# ‘முயற்சிக்கு முதலிடம்’ நிகழ்வு கொழும்பு டவர் மண்டபத்தில்!

## ஆர்.ஜே.மீடியா ஊடக வலையமைப்பின் ஐந்து வருட பூர்த்தியை ஒட்டி

(றிஸ்வான் சாலிஹு)

“முயற்சிக்கு என்றும் முதலிடம்“ வழங்கி நாடளாவிய ரீதியில் ஊடகம், கலை மற்றும் கல்வித்துறைகளில் பல சேவைகளை வழங்கி வரும் ஆர்.ஜே. மீடியா ஊடக வலையமைப்பின் ஐந்து வருடப் பூர்த்தி நிகழ்வும், பத்துத் துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கான மகுட விருது வழங்கல் நிகழ்வும் இவ்வலையமைப்பின் பணிப்பாளரும், வானொலி அறிவிப்பாளருமான ஏ.எம். இன்சாப் தலைமையில் கொழும்பு டவர் மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றன.

ஊடகம், கல்வி, கலை, இலக்கியம், சுகாதாரம், ஆன்மீகம், சமூக சேவை, சாதனையாளர், இளம் தொழில் முயற்சியாளர் மற்றும் அரச நிர்வாகத் துறை என்ற பத்துத் துறைகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மகுட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஆர்.ஜே. மீடியாவின் இரண்டு மாத கால ஊடகப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கல், போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பு, ஆர்.ஜே. மீடியா உறுப்பினர்கள் கௌரவிப்பு மற்றும் அதிதிகள் கௌரவிப்பு என இன்னும் பல நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் அரங்கேற்றப்பட்டன. இந்நிகழ்வில், இலங்கையின் நாலா திசைகளிலும் இருந்தும் பல நூற்றுக்கானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், கௌரவ அதிதிகளாக, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான என்.எம். அமீன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஒன்றியத்தின் தலைவரும், சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளருமான உமர்லெப்பை யாகூப், சமூகப் பணி மற்றும் தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குனர் வி. ஜெயரூபன், ஊடக நிறுவனங்களின் பிரதானிகள், ஊடகவியலாளர்கள், ஒலி, ஒளிப்பரப்பாளர்கள், தேசிய கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர்கள், தனியார் நிறுவனங்களின் முகாமையாளர்கள், ஆர்.ஜே. மீடியா வலையமைப்பின் அங்கத்தவர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.








# யாழ் இசைக்கலையக்கத்தின் இசைப் போட்டி இன்று முதல்

யாழ் இசைக்கலையக்கத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நாடாளவிய ரீதியில் இசைப் போட்டி யாழ் கண்டி வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தில் இன்று காலை ஆரம்பிக்கபட உள்ளதாக அதன் தலைவர் செல்வ ரவிசங்கர் தெரிவித்தார்.

இந்தப் போட்டி, இலங்கையில் வாழுகின்ற 16 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட இசை ஆர்வலர்களை வெளிக்கொண்டு வரும் முயற்சியாக அமைந்துள்ளது.

பல இசைக் கலைஞர்கள் இலை மறை காயாக மறைந்துள்ள நிலையில் அவர்களை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டும் முயற்சியாக இந்தப் போட்டி அமைந்துள்ளது.




குறித்த போட்டி நிகழ்வுகளில் ஏற்கனவே விண்ணபித்தவர்களும் அது தவிர போட்டி தினமாகிய இன்று புதன்கிழமை புதிதாக இணைய விரும்புபவர்களும் இன்றைய தினம் நேரடியாக போட்டிகளில் கலந்து கொள்ள முடியும்.

இதேவேளை இன்று இடம்பெறவுள்ள போட்டிகளில் தெரிவு செய்யபடுவோர் அடுத்த போட்டிகளுக்கு அழைக்கப் படுவார்.

இறுதிப்போட்டி ஏப்ரல் மாதமளவில் இடம்பெறும். போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறும் மூன்று வெற்றியாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

மேலும் தென்னிந்திய இசைக் கலைஞர்களை தாண்டியும் சுதேசிய இசைக் கலைஞர்களை வளர்ப்பதே இந்த போட்டியின் நோக்காக உள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.





# இந்திய மீனவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை இந்திய, தமிழக அரசுகள் முன்னெடுக்க வேண்டும்

## இந்தியப் பிரதித் தூதரிடம் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் கோரிக்கை

இந்திய மீனவர்கள், இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபடுவதை தடுப்பதற்கு இந்திய ஒன்றிய மற்றும் தமிழக அரசாங்கம் என்பன உரிய – காத்திரமான – நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கடற்றொழில், நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரிக்கை விடுத்தார்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைகின்றமையாலேயே அவர்கள் கைது செய்யப்படுகின்றனர் எனவும், மீனவர் விவகாரத்தை மனிதாபிமானத்துடனேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அணுகுகின்றது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் சத்தியஞ்சல் பாண்டே, கொழும்பு, மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சுக்குநேற்று வருகை தந்திருந்தார்.

அமைச்சருக்கும், பிரதி உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், கலாசார மற்றும் பொருளாதார உறவுகள் பற்றி பேசப்பட்டாலும் மீனவர் பிரச்சினை குறித்த விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது இந்திய மீனவர்களின் இழுவை படகு உட்பட சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையால் வடக்கு மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் இலங்கையின் கடல்வளத்துக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றி அமைச்சர் எடுத்துரைத்தார்.

இலங்கை கடற்பரப்புக்குள் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டது. மீனவர் பிரச்சினையை மனிதாபிமான ரீதியிலேயே அணுக வேண்டும் என இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

“ஆம், மனிதாபிமான முறையிலேயே அணுகுகின்றோம், சம்பவ தினத்தன்று இந்திய மீனவர்கள் கடற்படையினரை அச்சுறுத்தும் விதத்தில் நடந்துகொண்டதாலேயே அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளன“ என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதேபோல பெரும்பாலான மீனவர்கள் கடற்படையினர் எச்சரிக்கை விடுத்தால் திரும்பி செல்கின்றனர் எனவும், ஒரு சிலரே அத்துமீறுகின்றனர் எனவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

குறிப்பாக தமிழகத்திலுள்ள பணபலம் படைத்த முதலாளிமார், அரசியல்வாதிகள் மீனவர்களை பகடைக்காயாகப் பயன்படுத்த முற்படுகின்றனர் எனவும், தமது வாழ்வாதாரம் பற்றி மட்டுமே அவர்கள் சிந்திக்கின்றனர் எனவும், வடக்கு மீனவர்களின் நிலை பற்றி சிந்திப்பதில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு இந்திய ஒன்றிய மற்றும் தமிழக அரசுகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதேவேளை மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்ற உறுதிமொழியை வடக்கு மீனவர்களுக்கு தேசிய மக்கள் சக்தி வழங்கியது. அதற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அந்த ஆணையை மதித்து, நிறைவேற்றுவதற்குரிய பொறுப்பு தமது தரப்புக்கு உள்ள விடயத்தையும் அமைச்சர் மேற்படி சந்திப்பின்போது எடுத்துரைத்தார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக அபிவிருத்திக்காக இந்தியா வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், அவை தொடர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் பாரதியின் நினைவுப் பகிர்வு



கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மூத்த பத்திரிகையாளர் பாரதி இராசநாயகம் நினைவுப்பகிர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது.

சங்கத்தின இலக்கியக்குழு செயலாளர் தெட்சணாமூர்த்தி மதுசூதனன் தலைமையிலான இந்த நிகள்ழ்ல் வீரகத்தி தனபாலசிங்கம், நடராஜா ஜனகன், நடராஜா காண்டீபன், அமிர்தநாயகம் நிக்சன், தேவகௌரி சுரேந்திரன் , கதிரவேலு ரமணேஷ் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.





# பாலியாறு திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படாமை குறித்து அதிருப்தி தெரிவித்து ஜனாதிபதிக்கு சீ.வி.கே. கடிதம்

பாலியாறு நீர்வழங்கல் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு எதுவும் 2025ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமையை இட்டு மிகவும் கவலையும் ஏமாற்றமும் அடைகிறோம் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் வட மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்திருக்கின்றார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் முகம்கொடுத்துவரும் நீர்விநியோகப் பிரச்சினை தொடர்பாக தாங்கள் முழுமையாக அறிந்திருக்கிறீர்கள் என நான் திடமாக நம்புகிறேன். கடந்த ஏழு தசாப்தங்களாக யாழ்ப்பாண மாநகர பிரதேச, தீவக மற்றும் தென்மராட்சி மக்கள் குறிப்பாக நியாயமான சுகாதாரமான நீர் விநியோகத்திற்கு ஏங்கியிருக்கிறார்கள்.

வட மாகாணசபை, யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கான நீர்விநியோகத்துக்கென வருடம் பூராகவும் கடலைச் சென்றடையும் நீரை திசை திருப்பும் திட்டமாக பாலியாறு நீர் விநியோகத் திட்டத்தை முன்மொழிந்திருந்தது.

இந்தத் திட்டத்தை செலவுச் சிக்கனமான, சாத்தியமான அவசரமான ஒன்றாக பரிசீலித்து ஏற்றுக்கொண்டு முன்னுரிமை அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு சிபாரிசு செய்தது.

2024 ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் பாலியாறு நீர்வழங்கல் திட்டத்திற்கென ரூபா 250 மில்லியன் ஒதுக்கப்பட்டு, திட்டப்பணிமனையும் உத்தியோகபூர்வமாக வெள்ளாங்குளத்தில் 2024 மே மாதம் பதினைந்தாம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் தொடர் நிறைவேற்றலுக்கான நிதி ஒதுக்கீடு எதுவும் 2025ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமையை இட்டு மிகவும் கவலையும் ஏமாற்றமும் அடைகிறோம். இந்தத் திட்டம் கைவிடப்பட்ட மாதிரியான தோற்றப்பாடு காணப்படுகின்றது.

எனவே இந்தத் திட்டத்தின் நிறைவேற்றலுக்கான போதிய நிதியை தற்போது பரிசீலிக்கப்படும் வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்து அதன் துரித நிறைவேற்றத்திற்கான பணிப்புரையை வழங்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். - என்று உள்ளது.




# மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு வடக்கில் எவரும் விண்ணப்பிக்கவில்லை

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிக்கு வடக்கில் இருந்து எவரும் விண்ணப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிக்கு மத்திய கல்வி அமைச்சு இம் மாதம் 15 ஆம் திகதி விண்ணப்பம் கோரியுள்ளது.

இவ்வாறு கோரப்பட்ட விண்ணப்பத்தின் இறுதித் திகதி எதிர் வரும் 03ஆம் திகதிவரையே உள்ளபோதும் வடக்கில் இருந்து எந்தவொரு அதிகாரியும் இன்றுவரை விண்ணப்பிக்கவில்லை.

இவ்வாறு எவருமே வடக்கில் இருந்து விண்ணப்பிக்காத நிலையில் தெற்கில் இருந்து எவரேனும் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அங்கிருந்து ஒருவரே தேர்வாகும் சூழல் காணப்படுகின்றது.



# யாழ். பண்ணை நடைபாதைப் பகுதியை கலக்கிய திறந்தவெளிக் கொண்டாட்டம்

மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள், பாரம்பரிய போட்டிகள், உணவுகள், யோகாசனம், பொப்பிசைப் பாடல் போன்றவற்றுடன் பெப்ரவரி 22 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் பண்ணை நடைபாதை மற்றும் கோட்டையின் பண்ணை பக்கப் பகுதி திறந்தவெளிக் கொண்டாட்ட நிகழ்வுகளால் அதிர்ந்தது.

சிகரம் நிறுவனத்தின் படலை சுற்றுலா சேவைப் பிரிவு, ஆயுசு 100 பரிபூரண நலவாழ்வு மையம் என்பன இணைந்து, ESAF Global Canada நிறுவனத்தினருடன் கூட்டாக முன்னெடுத்த இந்த நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக இப்பகுதியில் ஒரு மாலை நேர மகிழ்வூட்டல் பொழுதாக அமைந்திருந்தது.

மாலை 4 மணியளவில் கிறிஸ்துவுக்கான இளைஞர் அணியின் தொண்டர்களின் ஏற்பாட்டில் ஆரம்பமான விளையாட்டு நிகழ்வுகளில், சிறுவர்கள், இளைஞர், யுவதியர், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி உற்சாகமாக கலந்துகொண்டு மகிழ்வடைந்தனர்.

சாக்கோட்டம், பலகை நடை, கயிறு இழுத்தல், ஓலை பின்னுதல், சங்கீதக் கதிரை என ஏராளமான விளையாட்டு நிகழ்வுகள் இதில் கலந்துகொண்ட அனைவரையும் மிகுந்த உற்சாகமான நிலைக்கு இட்டுச்சென்றன.

விளையாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கி உற்சாகமளிக்கப்பட்டது.

சிகரம் நிறுவனத்தின் நிறுவுநரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமான கோடீஸ்வரன் றுஷாங்கன் மற்றும் ESAF Global Canada நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் செரூபா ஆகியோர் தமது இந்த முயற்சியின் நோக்கம், இலக்குகள், எதிர்கால திட்டங்கள் தொடர்பாக பார்வையாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

தொடர்ந்து, சிகரம் நிறுவனத்தின் ஆயுசு 100 பரிபூரண நலவாழ்வு மையத்தின் யோகாசன வழிகாட்டல் நிகழ்வு நடைபெற்றது.

யோகக் கலையில் இந்திய அதியுயர் பட்டம் பெற்ற யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த யோகாசன வழிகாட்டல் நிகழ்வை, சிறுவர் யோகக்கலை நிபுணர் சித்த மருத்துவர் இரத்னலகி, ஆயுசு 100 யோகாசன ஆசான் சித்த மருத்துவர் இராகுலன், சக பயிற்றுநர் சித்த மருத்துவர் தர்சினி, வைகறை யோகாசன பயிற்சி மையத்தின் பயிற்றுநர் சித்த மருத்துவர் தனுராஜ் மற்றும் சக பயிற்றுநர் சித்த மருத்துவர் ஜனனி ஆகியோர் யோகாசனத்தின் பயன்கள், நன்மைகள், நோயற்ற வாழ்வுக்கான அதன் வழிமுறைகள் பற்றிய விளக்கங்களை பங்குபற்றியோருக்கு வழங்கினர்.

மருத்துவர் இரத்னலகியின் ஆயுசு சிறுவர் யோகா பயிற்சி நிலையத்தின் மாணவர்களான சிறுவர்களுடன் இணைந்து, ஆயுசு 100 யோகா ஆசான் மருத்துவர் இராகுலன், பயிலுநர்கள் மற்றும் வைகறை யோகாசன பயிற்சி மையத்தின் மருத்துவர் தனுராஜ் ஆகியோரும் இணைந்து யோகாசன செயன்முறை விளக்கங்களை வழங்கினர்.

தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பொப் இசைப் பாடகர் ஹென்ஸ்மன் அழகிய தமிழ் பொப் இசைப் பாடல்களை பாடி பார்வையாளர்களை மகிழ்வித்தார்.

உள்ளூர் உற்பத்தி நிறுவன உரிமையாளரான ஜீவாகரன் இணை முயற்சியாளரான அவரது மனைவி, பிள்ளைகள் இணைந்து, பாரம்பரிய ஆரோக்கிய உணவு வகைகளான குரக்கன் கூழ், புட்டும் நண்டுக்கறியும், தோசை ஆகியவற்றை தயாரித்து வழங்கி, நிகழ்வில் கலந்துகொண்டோரின் நாவுக்கும் சுவையூட்டி மகிழ்வித்தனர்.

உள்ளூர் மக்கள் மாத்திரமன்றி, யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்திருந்த தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த நிகழ்வைக் கண்டுகளித்து, உணவு வகைகளையும் சுவைத்தனர்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் அவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கௌரவித்தமையுடன், நிகழ்வின் முக்கியத்துவம், அதன் எதிர்கால வளர்ச்சிக்கான தமது பூரண ஒத்துழைப்பை நல்குவார்கள் எனவும் உறுதியளித்துச்சென்றிருந்தார்.









# இஷாரா செவ்வந்தி இன்னும் நாட்டில்தான் இருக்கின்றார்

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு உதவிய முக்கிய சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி இன்னும் நாட்டில் இருக்கின்றார் என தகவல்கள் வெளியாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், கைது செய்யப்பட்ட அவரது தாயாரும் சகோதரரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.



இந்த கொலை சம்பவம் தொடர்பான தகவல்களை மறைத்ததற்காகவும், அதற்கு உதவி செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேக நபர்கள் கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் நேற்று பிரசன்னப்படுத்தப்பட்ட போது பொலிஸார் இந்த விடயத்தை நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

இந்தநிலையில் குறித்த கொலை சம்பவத்துடன் தொடர்புடையதாகத் தெரிவித்து இதுவரை 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கொழும்பு குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**25 - 08 - 1943**



**மறைவு**
**25 - 02 - 2025**

## அமரர் நவரத்தினம் தனலட்சுமி

யாழ்.வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி, பெருமாள் கோயிலடியை வதிவிடமாகவும் தற்பொழுது இல.92, சேர்விஸ் வீதி, (சிவன் கோயிலடி) கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் தனலட்சுமி நேற்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் – பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா – கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகலிங்கம், புஸ்பவதி, மகாலிங்கம் மற்றும் தனபாலசிங்கம், இராசகோபால் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரன் (விக்னா), விக்னராஜன் (சூட்) மற்றும் நந்தினி (பிரான்ஸ்), விஜிதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சற்சுதன், வத்சலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் எழில்நிலா, அருண்நிலா, ஈழக்குமரன், கவிநயா, தருணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் எழிலனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வு இன்று (26.02.2025) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடன் பிற்பகல் ஒரு மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு இரணைமடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.92, சேர்விஸ் வீதி,**
**கனகாம்பிகைக்குளம்,**
**கிளிநொச்சி.**

**தகவல்:**
**சிவகாந்தன் (மருமகன்)077 3838 848,**
**ஜீவகாந்தன் (மருமகன்) 077 4955 185**

# இன்றைய ராசி பலன்கள் - 26.02.2025




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதி நிலையை மேம்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்பஉங்களைமாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.02.2025




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்காண பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் திடமாகவும் ஸ்திரமாகவும் இருக்கும். மன வருத்தங்கள் ஏதும் இல்லாமல் இன்று திருப்தியான உணர்வுடன் இருப்பீர்கள்.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

# யாழ். - திருக்கேதீச்சரம் பாதயாத்திரை இன்று திருக்கேதீச்சரத்தை அடையும்!

(வி.ரி.சகாதேவராஜா)

உலக சைவத்திருச்சபையின் ஏற்பாட்டில் மகாசிவராத்திரியை முன்னிட்டு ஒன்பதாவது வருடமாக, யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து திருக்கேதீச்சரம் வரையான பாதயாத்திரை இன்று (26)திருக்கேதீச்சரத்தைச் சென்றடையும்.

உலக சைவத்திருச்சபையின் இலங்கைக்கான இணைப்பாளர் ஸ்ரீ சுமுகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தப் பாதயாத்திரை நேற்று (25) செவ்வாய்க்கிழமை காலை பாப்பாமோட்டையை சென்றடைந்தது.

கதிர்காம பாதயாத்திரீகர் குழுத் தலைவர் வேல்சாமி ஜெயராஜா தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதற்கான விசேட பூஜையும் வழிபாடும் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்றது.

சுமார் 30 பக்தர்கள் ஆறு நாள்களின் பின்னர் இன்று சிவராத்திரியன்று திருக்கேதீச்சரத்தை அடைந்து மகாசிவ ராத்திரி விரதம் அனுஷ்டிப்பர்.

